தென்னாட்டின் வீரம் செறிந்த வரலாற்றுப் பக்கங்களில்

# புரட்சிச் சுடர் வீரபாண்டிய கட்டபொம்மன் புகழ் எந்நாளும் ஒளி வீசும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, அக். 18-

தென்னாட்டின் வீரம் செறிந்த வரலாற்றில் புரட்சிச் சுடர் வீரபாண்டிய கட்டபொம்மன் புகழ் எந்நாளும் ஒளி வீசும் என்று அவரது நினைவு தினத்தை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-



**ஆங்கிலேய ஆட்சிக்கெதிராகத் தமிழ்நாட்டில் தோன்றிய புரட்சிச் சுடர் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களின் நினைவு நாள்!**

**அந்நியரின் ஆதிக்கம் பொறுக்காமல், நெஞ்சை நிமிர்த்திப் போரிட்ட அவரது புகழ், தென்னாட்டின் வீரம் செறிந்த வரலாற்றுப் பக்கங்களில் எந்நாளும் ஒளிவீசும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவிட்டுள்ளார்.

அண்ணா அறிவாலயத்தில் War Room!

# பொதுமக்களுக்கு உதவிட நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தினேன்!

## தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலை தளப் பதிவு!

சென்னை, அக். 18 -

மழையினால் பாதிக்கப்படும் மக்களுக்குத் தேவையான உதவிகள் கிடைத்திட அண்ணா அறிவாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள *War Room* மூலம் ஒருங்கிணைத்து பொதுமக்களுக்கு உதவிடுமாறு கழக நிர்வாகிகளை நேரில் சென்று அறிவுறுத்தினேன் என தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் (15.10.2024) அன்று வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**“திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை நிலையமான அண்ணா அறிவாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள ‘War Room’ஐப் பார்வையிட்டு, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பகுதி வட்டச் செயலாளர்கள், கவுன்சிலர்கள் ஆகியோரைத் தொடர்பு கொண்டு, தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை முகாம்களுக்கு அழைத்துச் செல்வதோடு, அவர்களுக்குத் தேவையான உணவு உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகளைச் செய்துகொடுத்து, நிவாரணப் பணிகளில் அரசு இயந்திரத்துக்குத் துணை நிற்குமாறு கேட்டுக் கொண்டேன்.**

**இரவு முழுதும் விழிப்புடன் பணியாற்றி, கோரிக்கைகளை ஒருங்கிணைத்து, பொதுமக்களுக்கு உதவிடுமாறு கழக நிர்வாகிகளை அறிவுறுத்தியுள்ளேன்.**

**அண்ணா அறிவாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள War Room எண்: 08069446900**

@arivalayam @DMKITwing @TRBRajaa

#NorthEastMonsoon #ChennaiRains #TNRains”

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

# சேலம் கிழக்கு மாவட்டக் கழகக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிவிப்பு!

சேலம், அக். 18-

சேலம் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழு அவசரக் கூட்டம் அக். 24 அன்று நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



சேலம் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் 24-10-2024 வியாழக் கிழமை காலை 10.00 மணிக்கு வாழப்பாடியில் உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் மாவட்டக் கழக அவைத் தலைவர் மு.ரா.கருணாநிதி தலைமையிலும், தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ள சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் 081-கெங்கவல்லி க.ஆனந்த், (விழுப்புரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், 082 - ஆத்தூர்) எம்.எஸ். கணேஷ்குமார், (கடலூர் மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், 083 - ஏற்காடு) சி.ஆனந்தகுமார், (மாநில இளைஞர் அணி துணை செயலாளர், 091 - வீரபாண்டிஸ்ர). டி.கே. கிருபாகரன், (ஈரோடு வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்) ஆகியோரது முன்னிலையிலும் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், முன்னாள், இன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பி னர்கள், தலைமைக் கழக செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தேர்ந் தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தின் துணை அமைப்புகளான அணிகளின் மாநில துணை அமைப்பாளர்கள், மாவட்ட தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் BLA-2 மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இக்கூட்டத்தில் கழக உறுப்பினர் அட்டை வழங்குதல், 2. வாக்காளர் பட்டியல் சரிப்பார்த்தல் 3. கழக ஆக்கப் பணிகள். ஆகியவை குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

இவ்வாறு எஸ்.ஆர்.சிவலிங்கம் கூறியுள்ளார்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய

# ஊழியர்கள் முன்னேற்ற சங்கப் பொதுக்குழுக் கூட்டம்!

## மு.சண்முகம் எம்.பி. – பூச்சி எஸ்.முருகன் – கி.நடராசன் சிறப்புரை!

சென்னை, அக்.18-

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய ஊழியர்கள் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் பொதுக்குழுக் கூட்டம் (19.10.2024 - சனிக்கிழமை) காலை 10 மணிக்கு வசந்த பவன் ஹோட்டல், தெற்கு மாடவிதி, மயிலாப்பூரில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய ஊழியர்கள் முன்னேற்ற சங்கம் மாநில பொதுச்செயலாளர் ந.சண்முகசுந்தரம் தலைமை வகிக்கிறார்.

எஸ்.கமலநாதன், எல். கோகுல்ராஜ், என்.நந்தகோபால், டி.சுரேஷ்குமார், எஸ்.மனோஜ், ஆர்.பிரபு, ஆர்.செந்தில்குமார், கே. சுகுமார், ஏ.நடராஜன், எஸ்.ஆனந்தன், பி. யுவராஜ், கே.சாலமன்ராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எஸ்.முத்துக்குமார், இ.தாஸ் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

இப்பொதுக்குழு கூட்டத்தில் அகில இந்திய தொழிலாளர் முன்னேற்ற சங்க பொதுச்செயலாளர் மு.சண்முகம் எம்.பி., தலைமை நிலைய செயலாளர் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி எஸ்.முருகன், அகில இந்திய தொழிலாளர் முன்னேற்ற சங்க பொருளாளர் கி.நடராசன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் மகளிர் குழு: திருமதி.எஸ்.விஜயலட்சுமி திருமதி. என்.லட்சுமி திருமதி.ஏ.ரசியா திருமதி.எம். சசிகலா திருமதி. ஜெ.மலர்விழி திருமதி.எஸ்.சித்ராதேவி

தொழில் நுட்பக் குழுவினர்: ஆர்.சீனிவாசன் எஸ். தினகரன் ஆர்.யோகேஷ்குமார் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொள்கின்றனர்.

அமைப்புச் செயலாளர் கே.முருகன் நன்றியுரை யாற்றுகிறார்.

இதில் பொதுக்குழு, செயற்குழு மற்றும் சிறப்பு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டத்தில் தொகுதி பார்வையாளர் ஜாபர் அலி கலந்துகொண்டு வாக்காளர்கள் பெயர் பட்டியல் உள்ளிட்ட பல்வேறு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார். உடன் முன்னாள் அமைச்சரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான செஞ்சி மஸ்தான், மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் சேகர், துணைச் செயலாளர் ரவிக்குமார், நகரச் செயலாளர் ஆசிரியர் கண்ணன் உள்ளிட்டோர் உடன் உள்ளனர்.

கழகத்தவர்கள் எண்ணங்களின் சுமை தாங்கியாக –

# சிந்தனையாளர்களின் திசை வழிகாட்டியாக விளங்கியவர் ‘முரசொலி செல்வம்’!



பெங்களூருவில் தன்னுடைய இல்லத்தில் கிஞ்சிற்றும் எதிர்பாராத வகையில் “முரசொலி” கழக நாளிதழுக்கு எழுதுவதற்கு முன் சற்று ஓய்வெடுக்கச் சென்ற ஆருயிர் நண்பர் முரசொலி செல்வம் தன் வாழ்க்கை அத்தியாயத்தின் எஞ்சிய பகுதியை எழுதிமுடித்து நிரந்தர ஓய்வெடுத்து விட்டார் என்ற செய்தி 10.10.2024 ஆம் தேதி வெளிவந்த நிலையில், கோடிக்கணக்கான கழகத் தோழர்கள் திகைப்பில் ஆழ்ந்து, ஆறாத் துயரத்தில் மூழ்கினர். கழகத்தவர்களின் நிலைமை இதுவெனில், அவரது துணைவியார், மறைந்த முத்தமிழறிஞர் கலைஞரின் செல்வ மகள் செல்வியின் நிலை எப்படி இருந்திருக்கும் எனக் கற்பனை செய்து கூட பார்க்க இயலவில்லை.

அதுமட்டுமல்ல; தமிழ்நாடு முதல்வரின் உறவு முறைக்கு முரசொலி செல்வம் அத்தான் எனினும், முதல்வரால் “குட்டி அத்தான்” என்று அழைக்கப்பட்டவர்தான் முரசொலி செல்வம் அவர்கள். தனது நெடிய அரசியல் பயணத்தில் சரியான கொள்கை வழிகாட்டியாக விளங்கிய பெருமைக்குரியவர்தான் முரசொலி செல்வம் என்றால் அது எவ்வகையிலும் மிகையான கூற்றல்ல. மேலும், “உங்களில் ஒருவன்” என்ற முரசொலிக் கடிதத்தில் “நான் ஆற்றிக்கொள்வதற்கும், என்னை தேற்றிக் கொள்வதற்கும் உரிமையோடு சாய்ந்த முரசொலி செல்வத்தின் தோள்கள் சரிந்து விட்டதே” என ஆற்றொணா துயரத்தை வெளிப்படுத்திவிட்டு, முதல்வர் அவர்கள். அதேநேரத்தில் மழை வெள்ளத்திலிருந்து மக்களைக் காப்பாற்றுகின்ற அடிப்படை கட்டமைப்புகளுக்கு ஓய்வின்றி ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினார். இதற்கிடையில் திருவள்ளூருக்கு அருகில் ஏற்பட்ட இரயில் விபத்தால் காயமடைந்தவர்களைக் காப்பாற்றிக் கரை சேர்க்கும் பணியையும் மேற்கொண்டார்.



**பொன். முத்துராமலிங்கம்**

முன்னாள் அமைச்சர்,

கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்

தமிழ்நாடு முதல்வருக்கு ஒரே நேரத்தில் உருவான எதிர்பார்க்க முடியாத சோக நிகழ்வுகளை, “எதையும் தாங்கும் இதயத்தை” பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியவர்களிடமிருந்து பெற்றக் காரணத்தினால் இந்த சோக நிகழ்வுகளை எதிர்கொள்ள முடிகிறது என்றுதான் எண்ணிடத்தோன்றுகிறது. மறைந்த முரசொலி செல்வம் எங்களோடு சட்டக் கல்லூரியில் பயின்றவர், படிக்கின்ற காலகட்டங்களில் மாணவர் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வழிகாட்டியாக விளங்கியவர், மட்டுமல்லாமல் மாணவர் திராவிட முன்னேற்றக் கழகத்தை தமிழ்நாடு முழுமையும் உருவாக்குவதற்கும், மாணவர்கள் அமைப்புகளின் அடிப்படையில் பணி மேற்கொள்வதற்கும், தீவிரப்பணிகளை தொடர்ந்து மேற்கொண்டதோடு, சிறந்த வழிகாட்டியாகவும், சிந்தனையாளராகவும், மாணவர்களால் போற்றப்பட்டவர், பாராட்டப்பட்டவர் என்பதை நாங்கள் அறிவோம்.

கழக மாணவர் இயக்கத்தை வளர்த்தவர் என்பதோடு மட்டுமல்லாமல், தலைசிறந்த பத்திரிகையாளர்களுள் ஒருவராகவும் திகழ்ந்தார். முரசொலி ஆசிரியராகவும் பணியாற்றினார். முரசொலி செல்வத்தின் அரசியல் விமர்சனப் பெட்டிச் செய்திகள் முரசொலி வாசகர்களின் கவனத்தை பெரிதும் ஈர்த்த பகுதியாகும். எந்தப் பத்திரிகையாளருக்கும் ஏற்படாத ஓர் சிறப்பு நிகழ்வு இவரது பத்திரிக்கைத் துறை வாழ்க்கையில் நிகழ்ந்தது. சட்டமன்றத்தினுடைய உரிமைகளை மீறினார் என்று குற்றம் சாட்டப்பட்டு சட்டமன்றத்தில் சபாநாயகருக்கு எதிரே சபை உரிமைகளை மீறிய குற்றவாளியாக விசாரணைக்கு நிறுத்தப்பட்டார். அப்பொழுதும் அவர் கூண்டில் நிறுத்தப்பட்ட அரிமாவாக நெஞ்சுயர்த்தி கம்பீரக் குரலில் தன் கருத்தினை சபைமுன் வைத்தார்.

ஓர் பத்திரிக்கையாளன் என்ற முறையில் உணமைகளை கொண்டுசேர்த்து மக்களுக்கு விழிப்புணர்ச்சி உருவாக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் தனக்கு உண்டு என தொடங்கி, தொடர்ந்து வாதிட்டு கூண்டிலிருந்து விடுவிக்கப்பட்ட அரிமாவென வெளியே வந்த தனித்த சிறப்பும், பெருமையும் மறைந்த என் ஆருயிர் நண்பர் முரசொலி செல்வத்தையே சாரும். முரசொலி செல்வம் அவர்கள் திராவிட இயக்கத்தினுடைய கருத்துகளை பல்வேறு வடிவங்களில் முரசொலி இதழ் மூலமாக மக்களுக்கு கொண்டு சேர்ப்பார். பெட்டிச் செய்திகள் மூலம் அரசியல் எதிர்ப்பாளர்களுக்கு விளக்கம் அளிப்பார். மக்களையும் விழிப்புணர்வு கொள்ளச் செய்வார். அரசியல் தட்பவெப்ப நிலைக்கு ஏற்ப அவர் எழுத்துகள் பல்வேறு வடிவம் பெறும். சில நேரம் உரையாடல்களாகவும், சில நேரம் நாடகக் கதாபாத்திரங்களாகவும் உருவகப்படுத்தி, அரசியல் கருத்துக்களை சாமானிய மக்களும் விளங்கிக் கொள்ளத் தக்களவில் வெளிப்படுத்துவார்.

சில நேரங்களில் அரசியல் சூழ்நிலைகளை விளக்கி, அதை மக்களின் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டுமென்பதற்காக திரைப்படப் பாடல்களையே தலைப்பாக்குவார். எதிர்க்கட்சிகளின் விமர்சனங்களுக்கு கொஞ்சம் சூடாகவும், காரமாகவும் முரசொலியின் பதில்கள் இருக்க வேண்டுமென்று மக்கள் விரும்பினால், ஆம்! எதிர்பார்த்தால் முரசொலி செல்வத்தின் கட்டுரைகள் “சிலந்தி வடிவம்பெறும்” . கழகத் தோழர்களும், கட்சியின் அனுதாபிகளும், கட்சிக்கு அப்பாற்பட்டவர்களும் கூட “சிலந்தி” கட்டுரையைப் படிக்க தவறுவதில்லை என்பதை நான் அறிவேன்.

நான் தொடர்ந்து சிலந்தியின் கட்டுரைகளைப் படித்துவிட்டு மறைந்த என் ஆருயிர் சகோதரர் முரசொலி செல்வத்தோடு கட்டுரைகள் குறித்து பேசுவேன். அந்த நினைவலைகள் என் உள்ளத்தில் ஓய்ந்திடவில்லை. மாறாக கடல் அலைபோல் தொடர்ந்து கொண்டுதான் இருக்கும் என்பதில் ஐயமில்லை. இந்த முரசொலி செல்வத்தைப் போல் இன்னொரு செல்வத்தை நான் காணவியலாது, ஆனால் அந்த செல்வத்தின் நினைவலைகள் மட்டும் ஓயாது தொடரும், தொடர்ந்துகொண்டேதான் இருக்கும்.

ஆம்! என் இதயத்துடிப்பில் இரண்டறக்கலந்து ஒலி எழுப்பிக் கொண்டேயிருக்கும் என்பதில் ஐயமில்லை.



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், 15.10.2024 அன்று சென்னை, தரமணியில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின்கீழ் இயங்கிவரும் தமிழரசு அச்சகம் மற்றும் அலுவலகத்தில், அச்சுப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர் வே.ராஜாராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.